செய்தி வெளியீடு எண்: 509 நாள் : 15.10.2015

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 12.10.2015 அன்று தலைமைச் செயலகத்தில், 2014ஆம் ஆண்டு தென் கொரியாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற 13 விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கும், 2014ஆம் ஆண்டு தென் ஆப்பிரிகாவில் நடைபெற்ற 3–வது உலகக் கோப்பை டெனிகாய்ட் போட்டிகளில் குழுப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற ஒரு வீரர் மற்றும் வீராங்கனைக்கும், 2013ஆம் ஆண்டு ஜெர்மனியில் நடைபெற்ற மாற்றுத்திறனாளர்களுக்கான உலக இறகுபந்து வாகையர் போட்டிகளில் வெண்கலப் பதக்கம் வென்ற ஒரு வீரருக்கும், 2010ஆம் ஆண்டு சீனாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் கபடி விளையாட்டில் பதக்கம் வென்ற ஒரு வீரருக்கும் மற்றும் 8 விளையாட்டு பயிற்சியாளர்களுக்கும் உயரிய ஊக்கத்தொகைக்கான காசோலைகளை வழங்கினார்கள்.

அகில இந்திய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி வாகை சூட ஏதுவாக, தமிழகத்தைச் சேர்ந்த திறமை மிக்க விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளைக் கண்டறிந்து, அவர்களுக்கு உயரிய பயிற்சி அளித்தல், உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு மையங்கள் அமைத்தல், சிறந்த விளையாட்டு வீரர்கள் மேலும் பல சாதனைகள் புரிய உதவித் தொகை வழங்குதல், சர்வதேச போட்டிகளில் பங்கு கொண்டு வெற்றி பெறும் வீரர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்குதல் போன்ற பல்வேறு சிறப்பான திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

2014–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தென் கொரியாவில் நடைபெற்ற 17–வது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், ஹாக்கி விளையாட்டில் தங்கப் பதக்கம் வென்ற திரு.ஸ்ரீஜேஷ் பரட்டு ரவீந்திரன் மற்றும் திரு.ருபீந்தர் பால் சிங் ஆகிய இருவருக்கும் உயரிய ஊக்கத் தொகையான தலா 50 லட்சம் ரூபாய்க்கான காசோலைகள்; கபடி விளையாட்டில் தங்கப் பதக்கம் வென்ற திரு எஸ். ராஜகுரு அவர்களுக்கு சிறப்பு உயரிய ஊக்கத் தொகையான 30 லட்சம் ரூபாய்க்கான காசோலை;

ஸ்குவாஷ் விளையாட்டில் ஆடவர் பிரிவில் தங்கப் பதக்கம் வென்ற திரு.சௌரவ் கோஷல், திரு ஹரிந்தர் பால் சிங் மற்றும் திரு. குஷ் குமார் ஆகியோருக்கு உயரிய ஊக்கத் தொகையான தலா 50 லட்சம் ரூபாய்க்கான காசோலைகள்;

ஸ்குவாஷ் விளையாட்டில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்ற திரு. சௌரவ் கோஷல் மற்றும் ஸ்குவாஷ் பெண்கள் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்ற செல்வி தீபிகா பல்லிக்கல், செல்வி ஜோஷ்னா சின்னப்பா, செல்வி அனகா அலங்காமனி மற்றும் செல்வி அபராஜிதா பாலமுருகன் ஆகியோருக்கு உயரிய ஊக்கத் தொகையான தலா 30 லட்சம் ரூபாய்க்கான காசோலைகள்;

ஸ்குவாஷ் விளையாட்டில் பெண்கள் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற செல்வி தீபிகா பல்லிக்கல், பாய்மரப் படகோட்டுதல் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற செல்வி ஐஸ்வர்யா நெடுஞ்செழியன் மற்றும் செல்வி வர்ஷா கௌதம், 400 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் வெண்கலப் பதக்கம் வென்ற திரு.ராஜீவ் ஆரோக்கியா ஆகியோருக்கு உயரிய ஊக்கத் தொகையான தலா 20 லட்சம் ரூபாய்க்கான காசோலைகள்;

2014ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்கா, வீரினிஜிங் நகரில் நடைபெற்ற 3–வது உலகக் கோப்பை டெனிகாய்ட் போட்டிகளில் குழுப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற தமிழகத்தைச் சேர்ந்த செல்வி க. காயத்ரி மற்றும் திரு. வி. ஜேசுதாஸ் ஆகியோருக்கு தலா 10 லட்சம் ரூபாய்க்கான காசோலைகள்;

2013–ஆம் ஆண்டு ஜெர்மனியில் நடைபெற்ற மாற்றுத்திறனாளர்களுக்கான உலக இறகுபந்து வாகையர் போட்டிகளில் இரட்டையர் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற திரு.எஸ். பிரகாஷ் அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையான 10 லட்சம் ரூபாய்க்கான காசோலை;

2010ஆம் ஆண்டு சீனாவில் நடைபெற்ற 16வது ஆசிய விளையாட்டுப் போட்டியில் கபடி விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற இந்திய அணியில் பங்கேற்ற திரு.எஸ். ஜீவகுமார் அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையான 20 லட்சம் ரூபாய்க்கான காசோலை;

2014ஆம் ஆண்டு கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற 20–வது காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் சார்பாக பல்வேறு விளையாட்டுக்களில்

பதக்கங்கள் வென்ற தமிழகத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களின் பயிற்சியாளர்களான திரு. எ. நாகராஜன் மற்றும் திரு. டி. முத்து (பளுதூக்குதல்), திரு. அஞ்சான் சின்னப்பா மற்றும் திரு. சங்கர் பாசு (ஸ்குவாஷ்), திரு. எ. முரளிதரராவ், திரு. எ. சீனிவாராவ், மற்றும் திரு. எ. ஆண்டனி அற்புதராஜ் (மேசைப்பந்து), திரு. ஆரீஃப் அகமதுபர்ஹத் (ஹாக்கி) ஆகிய 8 பயிற்சியாளர்களுக்கு ஊக்கத் தொகையாக 40 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை;

என மொத்தம் 6 கோடியே 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை 17 விளையாட்டு வீரர், வீராங்கனைகள் மற்றும் 8 பயிற்சியாளர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமைச் செயலகத்தில் வழங்கி, “Once again I offer my congratulations and best wishes for all of you and hope that you will have a very bright future” என்று பாராட்டி வாழ்த்தினார்கள்.

உயரிய ஊக்கத் தொகைக்கான காசோலைகளை பெற்றுக்கொண்ட விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். சுந்தரராஜ், தலைமைச் செயலாளர் திரு கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) திருமதி த. சபிதா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள் : 15.10.2015